FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8075837

C

1. District : மாவட்டம் கடலூர் PS காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year ஆண்டு 2021 FIR No முதஅ. எண் 05/2021 Date நாள் 20.05.2021

2. (i) Act சட்டம் Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்
(ii) Act சட்டம் Sections பிரிவுகள் 7
(iii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் 18.05.2021 15.00 hrs Date to நாள் வரை 20.05.2021 11.00 hrs
Time Period நேர அளவு Time from நேரம் முதல் Time to நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.05.2021 Time நேரம் 1500 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II Time நேரம் 1500 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 75 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம், காட்டுமன்னார்கோயில்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.காஜா மைதீன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P.அப்துல் ரஹீம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மேற்பார்வையாளர் (g) Address : முகவரி 14, முஸ்லின் தெரு, உடையார்குடி, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. மணிமாறன், வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம், காட்டுமன்னார்கோயில்.
2. ராஜசேகர், வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம், காட்டுமன்னார்கோயில்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. —

10. —

11. —

12. —

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 20.05.2021 ஆம் தேதி மதியம் 15.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜர் செய்த கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, உடையார்குடி, 14, முஸ்லிம் தெருவைச் சேர்ந்த அப்துல் ரஹீம் மகன் A.காஜா மைதீன் என்பவர், எழுத்து மூலமான புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் A.காஜாமைதீன், த/பெ. P. அப்துல் ரஹீம், 14, முஸ்லிம் தெரு, உடையார்குடி, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம், பின்கோடு : 608 301, Mobile no. +91 6383269872 பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் மாவட்டம். ஐயா,

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the investigation / Refused investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

F.I.R. read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant

Signature of the Officer in charge, Police Station

S. Mala 20/05/2021

15. Date & Time of despatch to the court.

Name:

Rank:

S. MALA.
Inspector of police
V&AC, CUD.,

நான் உடையார்குடி முஸ்லிம் தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பொறியியல் படிப்பு படித்துள்ளேன். கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு எனக்கு திருமணம் நடைபெற்றது. நான் அதற்கு முன்பு ஓமன் நாட்டில் உள்ள தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணியாற்றியுள்ளேன். நான் கடந்த 11.05.2021-ம் தேதி e-சேவை மையத்தின் மூலமாக தனிக்குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்திருந்தேன். இது சம்மந்தமாக 18.05.2021 அன்று சுமார் 3 மணிக்கு ஆன்லைனில் விண்ணப்பம் செய்த ரசீது மற்றும் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை எடுத்துச்சென்று காட்டுமன்னார்கோயிலில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகத்தில் கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்ட கணினி முன் அமர்ந்திருந்த நபர், என்னிடம் ரூ.500/– கேட்டார். நான் அவரிடம் e-சேவை மையத்திலலேயே பணம் செலுத்திவிட்டதாக கூறினேன். அதற்கு என்னிடம் 500 ரூபாய் அலுவலக செலவிற்கு கொடுக்கவேண்டும் என்றும், பணம் ரூ.500/– கொடுத்தால்தான் குடும்ப அட்டை கிடைக்கும் என்றும் சொன்னார். நான் அவரிடம், தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும். என்னுடைய ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். என்னிடம் மனுவை பெற்றுக்கொண்ட அவர், நாளைக்கு தான் அலுவலகத்தில் இருக்க மாட்டேன் என்றும், நாளை மறுநாள் பணத்தை எடுத்து வந்து தன்னிடம் கொடுக்குமாறும், அதன்பின்னர் தான் குடும்ப அட்டை கிடைக்க ஏற்பாடு செய்வதாக சொன்னார். வெளியில் வந்து விசாரித்த போது என்னிடம் பணம் கேட்டவர் திரு. மணிமாறன் என்று தெரிந்தது. அவர் கேட்ட லஞ்ச பணத்தினை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இருந்தும் அவர் சொன்னபடி, அவரை இன்று சந்தித்து, லஞ்ச பணம் கொடுக்காமல் குடும்ப அட்டை பெற முயற்சி செய்யலாம் என்ற நோக்கத்தில் இன்று 20.05.2021 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு சென்றேன். மணிமாறன் அவர்கள் அலுவலகத்தில் இல்லை. கணினி முன் அமர்ந்திருந்த இருந்த மற்றொரு நபரிடம், மணிமாறன் அவர்கள் பற்றி கேட்ட போது, அவர் வரவில்லை என்றும், என்ன விஷயம் என்று என்னிடம் கேட்டார். நான் அவரிடம் குடும்ப அட்டை பெறுவதற்காக மணிமாறன் அவர்களை சந்தித்து பேசியது பற்றி கூறிவிட்டு, என்னிடம் பணம் இல்லை என்றும், எனக்கான குடும்ப அட்டை கிடைக்க நீங்களாவது ஏற்பாடு செய்து தாருங்கள் என அவரிடம் கேட்டேன். ஆனால் அவரும், மணிமாறன் கேட்டது போல பணம் ரூ.500/–

கொடுத்தால்தான் குடும்ப அட்டை கிடைக்கும் என்றும், எனவே 500 ரூபாய் நாளை கொண்டு வந்து என்னிடமோ அல்லது மணிமாறனிடமோ கொடுக்குமாறு கூறினார். நான் அவரிடம் பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு நாளை வருகிறேன் என சொல்லிவிட்டு அலுவலகத்தைவிட்டு வெளியில் வந்து விட்டேன். என்னிடம் இன்று பணம் கேட்ட நபர் ராஜசேகர் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். வீட்டிற்கு வந்த பின்பு நான் யோசனை செய்து பார்த்தபோது லஞ்ச பணம் கொடுத்து குடும்ப அட்டை பெற எனக்கு விருப்பம் இல்லை. ஆகையால், குடும்ப அட்டை வழங்க, என்னிடம் 500 ரூபாய் லஞ்சமாக கேட்ட இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். மேலும் வட்ட வழங்கல் அலுவலகத்தில் பணிபுரியும் மணிமாறன் மற்றும் ராஜசேகர் ஆகிய இருவரும் என்னிடம் கேட்ட லஞ்ச பணம் ரூபாய் 500/– கொண்டுவந்துள்ளேன்.

இப்படிக்கு (ஒப்பம் A.Kajamaidheen), அய்யா, வாதி கொடுத்த மேற்படி புகார் மனுவினை பெற்று, விசாரணைக்கு பிறகு, உத்திரவுபடி இன்று 20.05.2021 ஆம் தேதி 16.00 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/21, U/s 7 of The Prevention of Corruption Act, 1988, as Amended by The Prevention of corruption (Amendment) Act 2018–ன் படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்னர், இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

S. Chala
20/05/2021
Inspector of police.
V&AC, CUD.,